**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.32/2020 PW 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரவி | தந்தை/கணவர் பெயர்: | அழகு |
| ஊர் | : காளாப்பூர் | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2026

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

**<u>06.08.2026 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எங்களுக்கும், எதிரிகளுக்கும் இருந்த முன்விரோத பிரச்சனை காரணமாக காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. பொது இடத்தில் எதிரிகள் மாடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் அது குறித்து கலெக்டர் அலுவலகத்திலோ, வருவாய் அலுவலகத்திலோ, காவல் நிலையத்திலோ புகார் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. உண்மையிலேயே சம்பவத்திற்கு முன்பு எங்களுக்கும், எதிரிகளுக்கும் பிரச்சனை நடந்திருந்தால், காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால், சரியல்ல. எதிரிகளிடம் நான் ஆக்கிரமிப்புகளை அகற்ற சொல்லி கேட்டதால் தான் சம்பவம் நடைபெற்றது என்றால், சரிதான். எனது மகள் சத்தம் கேட்டு நாங்கள் சம்பவம் நடந்து கொண்டிருக்கும் போது சம்பவயிடத்திற்கு சென்று விட்டோம். எனது வீடும், எனது மகள் வீடும் எதிர் எதிர் வீடுகள் என்றால், சரிதான். எனது வீட்டிற்கும், எனது மகள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால், எனது வீட்டில் தான் எனது மகள் இருந்தார். சம்பவ சமயத்தில் எனது மகள் வீடு கட்டவில்லை. சம்பவத்திற்கு பிறகு தான் வீடு கட்டினார். எனது வீட்டிற்கும், எதிரிகள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால், எதிரிகள் வீடு ரோட்டை தாண்டி எதிரே உள்ளது. எதிரிகள் மலர், பாப்பு கம்பியை வைத்து எனது மகளின் காலில் எறிந்தார்கள். சம்பவம் இரவு 07.00 மணிக்கு மேல் நடந்ததால், கரண்ட் இல்லாததால், எதிரிகள் எனது

மகளின் முன்பக்க காலில் எறிந்தார்களா, பின் பக்க காலில் எறிந்தார்களா என்று தெரியவில்லை. கரண்ட் இல்லாததால் யார் யார் யாரை அடித்தது என்று எனக்கு தெரியாது என்றால், எறிந்தது மட்டும் தெரியாது, மற்ற விவரம் தெரியும். நாகராஜ், செல்வம் எனது மகளின் முடியை பிடித்து இழுத்தார்கள். அவரது தம்பி வயிற்றில் அடித்தார். எனது மகளின் எந்த கன்னத்தில் எதிரிகள் அடித்தார் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் நால்வரும் சம்பவ சமயத்தில் ஒரே இடத்தில் ஒன்றாக நின்று கொண்டிருந்தார்கள். கம்பியை எங்கிருந்து எதிரிகள் எடுத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இரண்டு விரல் அளவுள்ள சென்ட்ரிங் முறுக்கு கம்பியாகும். அந்த கம்பி கையளவு நீளம் இருக்கும். ஒரு கம்பி ஆகும். சண்டையானது அரை மணிநேரம் நடந்தது. சம்பவத்திற்கு பின்பு உடனடியாக எனது மகள் சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டார். மருத்துவமனையில் இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்றோம். காவல் நிலையத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்பு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். மருத்துவமனைக்கு சென்றது சம்பந்தமாக எனது மகள் ஆவணங்கள் கொடுத்திருப்பார். நான் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் சம்பவமே நடக்கவில்லை என்றாலும், புகார்தாரர் எனது மகள் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால், சரியல்ல.